# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 14,934/4 — 1970 දෙසැම්බර් 2 වැනි බදාදා — 1970.12.2

14,934/4 ம் இலக்கம்—1970 ம் ஆண்டு திசெம்பர் மாதம் 2 ந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I)—பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

எல்.டி.—பீ 47/53.

### அமைச்சர் பணிகள் ஒதுக்கல் (விளைவாந்தன்மைய ஏற்பாடுகள்) சட்டம்

2 ம் பிரிவின் கீழான கட்டளை

முன்னே நிதியமைச்சருக்கு ஒதுக்கிவிடப்பட்டிருந்த "ஒய்வூதியங்கள்" என்னும் விடயமானது 1946 ஆம் ஆண்டின் இலங்கை அரசியலமைப்பு (அரசவைக் கட்டளையின்) 46 (4) ஆம் பிரிவின் கீழ்ச் செய்யப்பட்டு 1970 ஆம் ஆண்டு யூன் மாதம் 2 ந் தேதிய 14,908/6 ஆம் இலக்க அதிவிசேட கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட ஒதுக்கல் மூலம் அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சருக்கு இப்போது முதலமைச்சரினால் ஒதுக்கிவிடப்பட்டிருக்கின்றபடியாலும் :

அத்தகைய ஒதுக்கலின் விளைவாக எழுத்திலுள்ள ஒரு சட்டத்தில் திருத்தங்கள் செய்தல் அவசியமாயிருக்கிறபடியாலும் :

ஆகவே முதலமைச்சர் சிறிமாவோ ரத்வத்தை டயஸ் பண்டாரநாயக்க ஆகிய நான் (385 ஆம் அத்தியாயமான) அமைச்சர் பணிகள் ஒதுக்கல் (விளைவாந்தன்மைய ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு இதனோடுள்ள அட்டவணையின் 1 ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள எழுத்திலுள்ள சட்டத்தை அவ்வட்டவணையின் 2 ஆம் நிரலில் நேரொத்த பதிவுகளில் காட்டப்பட்டுள்ள விதமாகவும் அந்த அளவுக்கும் இக்கட்டளையின் மூலம் திருத்துகிறேன்.

கொழும்பு,
1970 ம் ஆடு தெசெம்பர் மீ 2 ந் உ.

ஸ்ரீமா ஆர். டி. பண்டாரநாயக்கா,
முதலமைச்சர்.

அட்டவணை

| நிரல் 1 | நிரல் 2 |
|---|---|
| 1. (252 ஆம் அத்தியாயமான) மாநகர சபைகள் கட்டளைச் சட்டம் .. | (அ) 184 (1) ஆம் பிரிவில் காணப்படும் "நிதியமைச்சருடன் கலந்தாலோசித்த பின்னர் அளிக்கப்படும் அமைச்சரின் அங்கீகாரத்துடன்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "அமைச்சரின் அங்கீகாரத்துடன்" என்னும் சொற்கள் சேர்க்கப்படுதல் வேண்டும். |
| 2. 1959 ன் 7 ஆம் இலக்க உள்ளூரதிகார சபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான (255 ஆம் அத்தியாயமான) நகர சபைகள் கட்டளைச் சட்டம் .. | (ஆ) 172 அ, 172 ஆ ஆகிய பிரிவுகளில் "நிதியமைச்சருடன் கலந்தாலோசித்த பின்னர் அளிக்கப்படும் அமைச்சரின் அங்கீகாரத்துடன்" என்னும் சொற்கள் தோன்றுமிடங்களிலெல்லாம் அவற்றுக்குப் பதிலாக "அமைச்சரின் அங்கீகாரத்துடன்" என்னும் சொற்கள் சேர்க்கப்படுதல் வேண்டும். |
| 3. 1959 ன் 7 ஆம் இலக்க உள்ளூரதிகார சபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான (256 ஆம் அத்தியாயமான) பட்டின சபைகள் கட்டளைச் சட்டம் .. | (இ) 172 அ, 172 ஆ ஆகிய பிரிவுகளில் "நிதியமைச்சருடன் கலந்தாலோசித்த பின்னர் அளிக்கப்படும் அமைச்சரின் அங்கீகாரத்துடன்" என்னும் சொற்கள் தோன்றுமிடங்களிலெல்லாம் அவற்றுக்குப் பதிலாக "அமைச்சரின் அங்கீகாரத்துடன்" என்னும் சொற்கள் சேர்க்கப்படுதல் வேண்டும். |
| 4. (257 ஆம் அத்தியாயமான) கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம் .. | (ஈ) 49 அ, 49 ஆ ஆகிய பிரிவுகளில் "நிதியமைச்சருடன் கலந்தாலோசித்த பின்னர் அளிக்கப்படும் அமைச்சரின் அங்கீகாரத்துடன்" என்னும் சொற்கள் தோன்றுமிடங்களிலெல்லாம் அவற்றுக்குப் பதிலாக "அமைச்சரின் அங்கீகாரத்துடன்" என்னும் சொற்கள் சேர்க்கப்படுதல் வேண்டும். |

12—311


இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.